03

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2008

**ESP 2269 –** ஆரம்பமட்டத்தில் தமிழ்மொழி கற்பித்தல்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 29.05.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

எவையேனும் மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01. (i) "முதன்மை நிலை ஒன்றில் கற்கும் மாணவரது கேட்டல், பேச்சுத் திறன் விருத்திக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்". இதற்கான காரணங்களை விபரிக்க.

(ii) ஆரம்ப வகுப்பு மாணவர்களிடம் அவதானித்துக் கேட்டுக் கிரகிக்கும் ஆற்றலை மேம்படுத்த வழங்கக்கூடிய செயற்பாடுகள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

(iii) "பேச்சுத்திறன் விருத்தி கேட்டல் திறனிலேயே தங்கியுள்ளது". இக்கூற்று தொடர்பான தங்கள் கருத்துக்களை முன்வைக்க.

02. (i) மாணவர்களது பேச்சுத்திறனை விருத்திசெய்ய வகுப்பறையில் மேற்கொள்ளக்கூடிய மூன்று நடைமுறைகளை விபரிக்க.

(ii) பேச்சுக்குறைபாடுள்ள பிள்ளைகளை எவ்வாறு இனங்காணலாம்? அவற்றை நிவர்த்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விளக்குக.

(iii) நாளாந்த தேவைக்காக உரையாடுந்திறனை விருத்திசெய்ய தரம் ஐந்து மாணவருக்கு வழங்கக்கூடிய செயற்பாடுகள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றை எவ்வாறு வகுப்பறையில் நடைமுறைப்படுத்துவீர் என விபரிக்க.

03. (i) ஆரம்பவகுப்பு மாணவர்களிடையே வாசிப்புத்திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மூன்று நடவடிக்கைகளை விபரிக்க.

(ii) கிரகித்தலுக்கான வாசித்தல் திறனை வளர்க்கப் பொருத்தமான வாசிப்புமுறை நுட்பங்களைப் பட்டியற்படுத்துக. அவற்றில் இரண்டினை வகுப்பறையில் எவ்வாறு செயற்படுத்தலாம் என்பது பற்றி விளக்குக.

(iii) ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய மூன்று நடவடிக்கைகளை விளக்கமாக முன்வைக்க.

04. (i) எழுத்துப் பொறிமுறைத் திறனையும் எழுத்தாக்கத்திறனையும் வேறுபடுத்திக் காட்டுக. எழுத்துப்பொறிமுறைத்திறன்களைப் பட்டியற் படுத்துக.

(ii) பார்த்தெழுதுதல், சொல்வதெழுதல் என்ற இரண்டு செயற்பாடுகள் வாயிலாக மாணவர்களிடம் விருத்திசெய்யப்படும் திறன்கள் பற்றி விபரிக்க.

(iii) எழுத்துப்பொறிமுறைத் திறன் விருத்திக்கான முன்பயிற்சிகளில் முக்கியமானவற்றைக் குறிப்பிட்டு அவற்றின் பயன்பாட்டை விளக்குக.

05. (i) கல்வித் தொழிநுட்பம் என்றால் என்ன?

(ii) ஆரம்பவகுப்பு மாணவருக்கு மொழி கற்பித்தலுக்காக பயன்படுத்தக்கூடிய கற்பித்தல் சாதனங்களைக் குறிப்பிட்டு அவற்றைப் பயன் தருவகையில் எவ்வாறு தயாரித்துப் பயன்படுத்தலாம் என்பதை விபரிக்க.

(iii) 'இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களது தொடர்பாடல் திறன் மேம்படுத்தப்படுகின்றன.' இக்கூற்றுத் தொடர்பான உங்கள் கருத்துக்களை உதாரணங்கள் தந்து விளக்குக.

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினுக்கு** விடை எழுதுக.

(i) ஆரம்பவகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல் பற்றிய அறிவு இன்றியமையாததாகும்.

(ii) தரம் 5 மாணவரிடையே கட்டுரை எழுதுவது தொடர்பான திறன்களை வளர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.

(iii) வாசிப்பு வகைகளும் அவற்றின் பயன்பாடுகளும்.

(iv) ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் சிறுவர் சஞ்சிகைகள் அல்லது ஊடகங்களின் பங்கு.

(பதிப்புரிமையுடையது)